செய்தி வெளியீடு எண் : 2019 நாள் : 14.11.2022

## செய்தி வெளியீடு

### வடகிழக்கு பருவமழையினால் கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (14.11.2022) மழையால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், கீழ்பூவாணிக்குப்பம் பகுதியில் நீரில் மூழ்கியுள்ள விளைநிலங்களை பார்வையிட்டு ஆய்வு செய்து, மழையால் வீடுகளை இழந்த 13 பயனாளிகளுக்கும், கால்நடையை இழந்த ஒரு பயனாளிக்கும், நிவாரணத் தொகை மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார். மேலும், சிதம்பரம் வட்டம், வல்லம்படுகையில் மழை வெள்ளத்தால் வீடுகளை இழந்த 5 பயனாளிகளுக்கு நிவாரண தொகையும், 5 பயனாளிகளுக்கு நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்.

கடலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தாழ்வான பகுதிகள் கண்டறியப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 616 நிரந்தர மற்றும் தற்காலிக முகாம்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளது. கடலூர் மாவட்டத்தில் கனமழை ஏற்பட்டதன் காரணமாக தற்போது வரை 30 குடும்பங்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு 149 நபர்களுக்கு மூன்று வேளையும் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று, கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், கீழ்பூவாணிக்குப்பம் பகுதியில் பரவனாற்றிலிருந்து வரப்பெற்ற மழைநீரினால் 140 ஹெக்டர் வேளாண் விளைநிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மழைவெள்ளப் பாதிப்புகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்பட காட்சிகளையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து, கடலூர் மற்றும் குறிஞ்சிப்பாடி பகுதிகளுக்குட்பட்ட கூரைவீடு பகுதி சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட 10 பயனாளிகளுக்கு தலா ரூ.4100/– வீதம் 41,000 ரூபாயும், முழுமையாக கூரைவீடு சேதமுற்ற ஒரு பயனாளிக்கு 5000 ரூபாயும், ஓட்டு வீடு பகுதி சேதமடைந்த 2 பயனாளிகளுக்கு தலா ரூ.5,200/– வீதம் 10,400

ரூபாயும், கால்நடையை இழந்த ஒரு பயனாளிக்கு 16,000 ரூபாயும், என மொத்தம் 14 பயனாளிகளுக்கு ரூ.72,400/- மதிப்பிலான நிவாரண உதவிகளையும், வேட்டி, புடவை, 10 கிலோ அரிசி அடங்கிய நிவாரணப் பொருட்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து கனமழையினால் பாதிக்கப்பட்ட சிதம்பரம் வட்டம், வல்லம்படுகைக்கு சென்று வெள்ள பாதிப்புகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்பட காட்சிகளை பார்வையிட்டார். அப்போது, விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடம் வெள்ள பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள், மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கைகளையும், தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருவதற்கு தங்களது பாராட்டுகளை தெரிவித்தனர்.

இப்பகுதிகளில் கனமழையால் ஒரு சிமெண்ட் ஷீட் வீடு மற்றும் 2 குடிசை வீடுகள் முழுவதும் சேதமடைந்து பாதிக்கப்பட்ட 3 பயனாளிகளுக்கு தலா ரூ.5,000/- வீதம் 15,000 ரூபாய் மற்றும் பகுதியாக சேதமடைந்த 2 குடிசை வீட்டு பயனாளிகளுக்கு தலா ரூ.4,100/- வீதம் 8200 ரூபாய் நிவாரண தொகையும், வேட்டி, புடவை, 10 கிலோ அரிசி அடங்கிய நிவாரணப் பொருட்களையும், 5 பயனாளிகளுக்கு நிவாரணப் பொருட்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கடலூர் மாவட்டத்தில் மேற்கொண்ட ஆய்வின் போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பயிர் சேதங்கள், கால்நடை இழப்புகள், வீடுகளின் சேதங்கள் குறித்து கணக்கெடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விளைநிலங்களில் தேங்கியுள்ள நீரினை அகற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தினார்.

மழை தொடர்ந்து பெய்து வருவதால் தொற்றுநோய் ஏற்படா வண்ணம் மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தண்ணீர், பால், உணவுப் பொருட்கள் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திட வேண்டும் என்றும், பழுதடைந்த மின்கம்பங்களை உடனடியாக சீர்செய்து, சீரான மின்விநியோகம் செய்வதை உறுதி செய்திடுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

கனமழையால் ஆறு, வாய்க்கால்களின் கரைகளில் உடைப்பு ஏற்டாத வண்ணம் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும் என்றும், மழை காலத்தில் இடி, மின்னல் தாக்குதலால் உயிரிழப்பு ஏற்படுவதை தடுத்திட, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்றும், வெள்ளப்பாதிப்புள்ளாகும் பகுதிகளில் தேவையான நீர் இறைப்பான் இயந்திரங்களையும், மரம் அறுக்கும் கருவிகளையும், மணல் மூட்டைகளையும் தயார் நிலையில் வைத்திட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சபா. ராஜேந்திரன், திரு. ஜி. அய்யப்பன், திரு. ராதாகிருஷ்ணன், திரு. சிந்தனைச்செல்வன், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர். சுந்தரி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., கடலூர் மாவட்ட பொறுப்பு அலுவலர் திரு. அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கி.பாலசுப்ரமணியம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

…………

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in